சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அ.சா.2 திரு. மணி த /பெ. முனிசாமி, வயது. 54

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் கவுண்டப்பனுர் ஆகும். எனது மாமனார் செவ்வாத்தூரில் வசிக்கிறார். இரண்டு ஊருக்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 2 –3 கிமீ இருக்கும். சம்பவதினத்தன்று நான் எங்கு இருந்தேன் என்றால் செவ்வாத்தூரில் உள்ள எனது மாமனார் வீட்டில் இருந்தேன். அ.சா.1 எனது மாமனாரின் அக்கா ஆவார். எதிரியின் மகள் சத்தீஸ்வரியை எனது மனைவியின் சகோதரர் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். நான் அவர்களின் திருமணத்திற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். சம்பவ தேதியன்று இருவருக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். சம்பவதினத்தன்று இருதரப்பினரும் மாறி மாறி தாக்கி கொண்டார்கள் என்றால் சரிதான். யார் யார் என்ன ஆயுதங்களால் தாக்கி கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தங்கவேல், மற்றும் அவரது மனைவி தாக்கப்பட்டதாக கூறி ஜெயகாந்தன், என் மனைவி பாரதி, எனது மாமனார் பெரியத்தம்பி மற்றும் எனது மாமியார் வசந்தா ஆகியோர் மீது ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு 12.30 மணிக்கு நான் அழைத்து சென்றேனா என்றால் நேரம் சரியாக தெரியவில்லை. அப்போது நாங்கள் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்னரே 10.45 மணிக்கே எதிரிகள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. பிரச்சனை நடந்தபோது நான் அருகே சென்று சண்டையை விலக்கி விடவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில் இல்லதால் நான் சண்டையை விலக்கிவிடவில்லை என்றால் சரியல்ல. நான் அங்கே தான் இருந்தேன். போலீசாரிடம் சண்டை சம்மந்தமாக நான் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளை எனது மாமனார், மாமியார் மற்றும் எனது மனைவி ஆகியோர் தாக்கிவிட்டு அதிலிருந்து அவர்களை தப்பிக்க செய்வதற்காக அ.சா.1 ஐ மருத்துவமனையில் நான் அனுமதித்தேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரிகள் தான் அ.சா. 1 ஐ தாக்கினார். சம்பவத்தின் போது எதிரிகள் எனது குடும்பத்தாரை தாக்கவில்லை என்றால் சரியல்ல. எனது

மாமனார் குடும்பத்திற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

**Signature of Witness**

**Judicial Magistrate No.II**
**Tirupathur.**